# Appreciation

*We make all kinds of acquaintances in life, but only a few remain our associates, whether in the work place or private life, clinging to the soul by hooks of affability and good nature by the excellence of behaviour and geniality. Mr. K. Kurusamy of the Official Languages Department, who passed away recently was one such personality very hard to be forgotten even with the passage of time. Mr. Kurusamy joined the Department as a Research Assistant as far back as 1970, and serving the Department with unswerving diligence, he rose to the position of Assistant Research Officer and then to the prestigious post of Research Officer which position he held till the hour of his untimely demise that has created a vaccum, which, indeed is hard to fill. As Secretary and member of several Tamil Glossary Advisory Committees of the Department he had commendably contributed to the production of many Departmental publications. Endowed with proficiency in a number of languages he was found to be admirably suited to the not-so-easy task of coining appropriate equivalents and compiling clusters of synonymous words. As a tireless worker and efficient organiser of activities he held a good name in the Department and was much respected by his colleagues for his ever-ready-to-help-anybody attitude and amiable disposition. As an ardent Saivite and scholar, he was held in high esteem in the Hindu world. He impressed me greatly not only with the hall-mark of efficiency in his public career but also with warm human qualities. Now that he has made his inevitable journey to that undiscovered land from whose bourn no traveller returns, Let us pray for his soul to rest in peace.*

**Nimal Samarasundera**
*Commissioner*
*Department of Official Languages .*

உ
சிவமயம்

# நெஞ்சம் நிறைந்த சைவப்பெரியார்

சைவப் பெரியாரும், தமிழ் அறிஞருமான குமாரசுவாமிப்பிள்ளை குமாரசுவாமி அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். அமரத்துவமடைந்த கொக்குவில் குமாரசுவாமிப் புலவரதும், சிவபாக்கியம் அம்மையாரதும் ஏக புதல்வரான குருசுவாமி அவர்கள் நமது நாட்டிலே இந்த நூற்றாண்டிலே வாழ்ந்த முதன்மையாக வைத்துப் போற்றப்படும் சைவப் பெரியார்களில் ஒருவர் என்று கூறினால் அது மிகையல்ல.

அன்பும், பண்பும், ஒழுக்கமும், ஆற்றலும் கொண்டவராக விளங்கிய இப்பெரியார், இலங்கையில் மட்டுமன்றிக் கடல் கடந்த தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தனது சமயப்பிரசங்கங்கள் மூலம் சைவத்தொண்டாற்றியுள்ளார்.

இவரது சமயப் பிரசங்கங்கள், புராணபடனம், கதாப்பிரசங்கங்கள் மூலம் பயன் பெற்றோர் அநேகர். பன்மொழி அறிஞராக விளங்கிய குருசுவாமி அவர்கள் சமயதத்துவ அறிவிலும் மொழி ஆளுமையிலும் சிறந்து விளங்கியதால் சமயக் கருத்துக்களை யாவரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலே விளக்கும் ஆற்றல் உடையவராக விளங்கினார்.

பலசமய நிறுவனங்களினூடாகப் பெரும்பணியாற்றிய இவர் கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் துணைத்தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் சிறப்பாக நினைவு கூரத்தக்கவை. ஆண்டுதோறும் கதிர்காம உற்சவ காலங்களிலே கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை மடாலயத்தில் தனது கணீரென்ற, கம்பீரமான குரலில் நிகழ்த்தும் புராணபடனம் ஒரு எடுத்துக்காட்டாகும். அவரது கம்பீரமான குரலை இனிக்கேட்க முடியாதென்ற ஏக்கம் யாவரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

குருசுவாமி அவர்களின் மறைவு சைவ உலகுக்குப் பேரிழப்பாகும். இறைவன் விதித்த விதிப்படி அவனடி சேர்ந்த அன்னாரின் செயற்பாடுகள் என்றும் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம். அன்னாரின் ஆன்மா எல்லாம் வல்ல எம்பெருமான் திருவடிநிழலில் அமைதியுறப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா
பிரதம குருக்கள்
ஸ்ரீ பால செல்வவிநாயகமூர்த்தி கோயில்,
கப்பித்தாவத்தை, கொழும்பு - 10



# அன்பாகவும் இனிமையாகவும் பழகத் தக்கவர்

தமிழ் அறிஞராகவும் சைவசமயச் சான்றோராகவும் திகழ்ந்த கு. குருசுவாமி அவர்களின் மறைவு சைவ உலகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

தந்தையார் குமாரசுவாமிப் புலவரைப் போலவே குருசுவாமி அவர்களும் ஆழ்ந்த தமிழ் புலமை மிக்கவராக விளங்கினார். வடமொழி அறிவு பெற்றிருந்ததனால் புராண இதிகாசங்களை சுலோகங்களோடு சேர்த்து மிக எளிமையாக விளக்கும் திறமை பெற்றிருந்தார். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக சமயத்தையும் தமிழையும் வளர்க்க அவர் ஆற்றிய பணிகள் வியந்து போற்றத்தக்கவை.

இவர் கல்விநூல் வெளியீட்டுத் திணைக்களத்திற்காக பாலர் வகுப்பு முதல் க. பொ. த சாதாரண வகுப்புவரை சமய பாடங்களுக்கு கட்டுரை எழுதியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் சைவ சித்தாந்தம், கந்தபுராணம், திருமந்திரம் ஆகியவற்றை தொடர் சொற்பொழிவுகளாக வழங்கியுள்ளார். வானொலி நேயர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இவரது சொற்பொழிவுகளை கேட்டு ரசித்துள்ளனர்.

இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தபோதும், பின்னர் கொழும்பில் கடமை செய்தபோதும் சமய நிகழ்ச்சிகள் அனைத்திலும் கலந்துகொண்டு தனது பங்களிப்புகளை அளித்துள்ளார்.

கந்தஷஷ்டி, திருவெம்பாவை, கதிர்காம உற்சவம் போன்ற விழாக் காலங்களில் இவரது புராணபடனமும் கதாப் பிரசங்கங்களும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன.

தமிழ் பணிகளாலும், அருட் பணிகளாலும் சிறந்து விளங்கிய அமரர் குருசுவாமி சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர், செஞ்சொற்கடல் ஆகிய விருதுகளால் பாராட்டப்பட்டார். இவரது சமயத்தொண்டினைப் போற்றி இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு அதன் முதலாவது பக்தி விழாவில் ஞானசிரோன்மணி என்ற பட்டம் அளித்து கௌரவித்தது.

அன்பாகவும் இனிமையாகவும் பழகத் தக்கவரான குருசுவாமி அவர்களின் மறைவு குறித்து எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பி. பி. தேவராஜ்
இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.

உ
சிவமயம்

கலாநிதி
க. கனகராசா ஜே. பி.
D.M.Sc., D. Litt
உரிமையாளர் :
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தொலைபேசி : 23233

"திரு ஆலவாய்"
த. பெ. இல. 77,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்
(இலங்கை)

..............19...

# மறைபுகழ் இறைமுன் மறைமுதல் புகன்ற குருசுவாமி

திரு. குமாரசாமிப்பிள்ளை குருசுவாமி அவர்கள் இறைபதம் எய்திய சேதி அறிந்து கவலையுற்றோம்.

சைவப்புலவர் மணி த. குமாரசாமிப்பிள்ளையின் பாண்டித்தியம், புலமை, அறிவாழம் ஆகியவற்றை விஞ்சியவராக வளர்ந்து மிளிர்ந்த திரு. குருசுவாமி அவர்கள் தமிழகத்து அறிஞர்கள் மத்தியிலேயே தலை நிமிர்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் யாழ்ப்பாணம் எத்துணை உதவிற்று என்பதை ஆதார பூர்வமாக முன்வைத்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்தவர்.

மறைந்த ஞானி கிருபானந்த வாரியார் அவர்களின் அபிமானத்துக்குரியவர் குருசுவாமி அவர்கள். அன்னாரின் மனைவியார் பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்களின் துயரில் நாம் பங்கு கொள்கிறோம்.

மறைபுகழ் இறைமுன் மறைமுதல் புகன்ற குருசுவாமியின் பெயரைத்தாங்கிய அன்பர் அப்பன் சாமியின் அரவணைப்பில் சாந்தி காண்கிறார் என நம்புவோம்.

ஓம் சாந்தி.

இப்படிக்கு
உண்மையுள்ள
**க. கனகராசா**



# குருசுவாமிப் பிரபாவம்

## திதி வெண்பா

சீரார் பவ வாண்டு சேர்வைகா சித்திங்கள்
பேரார் வெண் பக்கப் பிரதமையே – ஏருரும்
விஞ்சை மிகுந்த குருசாமி வேள் விமலன்
செஞ்சரணம் சேர்ந்த தினம்

1. பொன்னுலகு பாருலகு புக்கதென்னப்
பொலிவுடைய கொக்குவில் நற் பதியில் வந்தோன்
மின்னிலகு செஞ்சடிலத் தண்ணல்பூசை
வினைமுடியா துணவருந்தாச் சீலம் பூண்டோன்
சொன்னலஞ்சேர் திருமுறைகள் புராணநூல்கள்
துகளறு சீர் சித்தாந்தம் என்னும் ஞான
மன்னுகடற் பொருளாழங் கண்டவாசான்
மாகவிஞன் குமாரசுவாமிப் பேரோனே.

2. மடவார்தம் சிரோமணியென் றுலகம் போற்றும்
மாதுமைநே ரெழிற்சிவபாக் கியப்பெண்மாதும்
அடலெரிசான் றாவதுவை புரிந்து பன்னாள்
ஆற்றியநற் பெருந்தவமே உதயபானு
வடிவாகி அன்னை பிதா இருவர் தங்கள்
மனங்களிப்ப விழிகளிப்ப மறுவிலாத
சுடராரும் மகவாகக் கேட்டை நாளில்
தோற்றிய தால் சைவ உல குவகை கூர.

3. செவ்வேளின் மழவிளமைப் பொலிவு மேவித்
திகழ் தலுறும் எழிலினைக் கண்டுவகை கூர்ந்து
மைமேவு கண்டத் தார்க்குபதேசம் செய்
மகனருளை நினைந்து குருசாமி நாமம்
தெய்வீகம் மிளிர் வகையி லுவந்து சூட்டி
தினமொரு வண்ணம் வளரமிகு சீராட்டி
நெய் பால் தேன் அளவிய பஞ்சமுத மூட்டி
நேரிழையார் பாராட்டி வளர்த்தலுற்றார்.

4. கொழுந்துமதி யெழுந்து வளர் பாங்கில் நாளும்
கோல வெழி லுருவுற்று பள்ளி சார்ந்து
செழுந் தமிழும் இலக்கணமும் தந்தையார் பால்
திருமுறையும் சித்தாந்தப் பிழிவும் தேர்ந்து

தெளிந்தறிவு மேன்மேலும் பெறு தல்வேண்டி
சீர்திகழ் யாழ்ப்பாணக் கல்லூரி சார்ந்து
வளந்திகழும் ஆங்கிலஞ் சங்கதமே பாளி
மறுவில் மொழி திரிபைய மறக்கற்றோந்தார்

5. சங்கதத்தல் விசேட கலை மாணிப்பட்டம்
சாரப் பெற்றே விபுல ஞான முற்றுப்
பொங்கு புகழ் ராமநாதன் கல்லூரி
பொருந்தி மொழி யாசானாய் கடமையாற்றி
துங்கமிகு அரசமொழித் திணைக் களத்தே
துலங்கிடுமா ராய்ச்சி உத்தி யோகத்தராய்
எங்குமிசை பரவவுயர் பணிகளாற்றி
எல்லெவரும் மதிப்பளிக்கும் ஏற்றமுற்றார்.

6. மன்னு புகழாறு முக ஆசானும் சீர்
மலர் மங்கை யர்க்கரசி மானுங்கூடி
முன்னரியற் றிய தவமே வடிவாய் வந்து
முழுநிலவு முகச் சுகுண வதியாய் மின்னும்
வண்ண மயில் தில்லை நாயகிப் பொன்மாதை
வன்னி கரியா வதுவை புரிந்தான் றோர்தம்
சொன்னயஞ்சேர் ஆசி மொழியால் தளிர்த்து
துலங்குமெழில் இல்லறத்தேர் நடத்தி யுற்றார்

7. அனமளித்தும் தனமளித்தும் அலந்தோர்க் கெல்லாம்
ஆதரவு புரிந்து விருந்தோம்பி அன்பால்
தின மறங்கள் செய்தவருந் திறத்தால் ஞானத்
தினகரனேர் அறிவொளியும் திருவுமொன்றாய்
வனப்புற மேவும் சிறப்பு மகிமை சார்ந்து
வர்த்தக வங்கிக் கிளையில் துணைவராகி
இனி துறையும் சுரேந்திரப் பூ மகிபன்தன்னை
ஏத்துமிசைச் சிரேட்ட மகனாகப் பெற்றார்

8. நைவளமே யனைய மொழி பயிலும் பூவை
நளின மலருறை மின்னாய் கொழும்பு மேவும்
மெய்யறிவுச் சர்வகலா சாலை தன்னில்
விஞ்ஞான மாணவியாய்த் திகழ்.பவானி
செவ்விமிகு மொரட்டுவைப் பல்கலைக் கூடத்தில்
சிறப்பாரும் பொறியியல் மாணவனாய் மேவும்
திவ்யகுணச் செல்வேந்த்ரன் சென்ற் பிறிஜெற்
சேரு மெழில் மாணவியாம் ஜனனிப் பாவை



9. இன்னவர்கள் மகாராக இனிது மேவி
இன்மொழியால் நற்பணியாலு வகை சேர்க்க
நன்னயஞ்சேர் நண்பர்மொழிச் சலாப வார்த்தை
நாடி நித மருகணைந்து மகிழ்வு கூட்ட
பன்னுமறை ஆகமஞ் சித்தாந்த நூலின்
பகரரிய நுண்பொருள்கள் உரைத்துக்காட்டி
வின்மலி செஞ் சடையண்ண லருளால் கல்வி
வினோத ரச மழைமுகிலாய் மேவினாரால்

10. பத்திமை சே ருஞ்சைவப் புராண நூற்கு
பயனுரைக்கும் போதினிலே பழுத்தஞான
வித்தகராகிய தந்தை குமாரசாமி
மேதகைய புலவரெனக் காட்சி நல்கி
சித்தாந்தப் பொருளுரைக்கும் வேளை தன்னில்
சிவஞான முனிவரெனத் தோற்றங் காட்டி
வித்வ சபை விவாத வரங்கினிலே யெல்லாம்
விளங்குதய தாரகை போல் விகாசித்தரால்

11. சைவமணங் கமழுபந்நி யாசமாரி
சந்ததமும் தலங்களிலாற்றிய சிறப்பால்
தெய்விகமார் சிவஞான வாரிதிப்பேர்
சீர்விருதும் மெய்கண்டசாத்திரத்தின்
துய்யசுடரறிவு நல னோக்கில்சைவ
சித்தாந்தக் காவலரென் றொருநற்பேரும்
மெய்யுணர்வார் இந்துகலா சாரமைச்சின்
ஞானசிரோமணி விருதும் வழங்கப் பெற்றார்

12. இன்னவகை மன்னிய சீர் உலக வாழ்வில்
இயம்பரிய கலைஞானம் உத்தியோகம்
அன்பு மனை மக்கள் அதிகாரமேன்மை
ஆகிய ஈரெண் பேறு சிறக்க வாய்த்தும்
செந் நெறியாம் சிவநெறியைப் போற்றி வாழ்ந்து
தேனிதழித் தாமர் பதம் சதமென்றோர்ந்து
தன்னுடலம் குருசாமி மகிபன் நீத்து
சார்ந்துற்றார் இயற்கை யொடுசங்கமித்தே.

- சிவ சிவ -

# பாரம்பரியம்

**செட்டி நன்னித்தம்பி – சட்டம்பி முருகேசு**

- வள்ளியம்மை + தம்பையா
  - தங்கம்மா + முருகேசு
  - கந்தையா + பர்வதம்
    - நாகரத்தினம்
    - அருளம்பலம் + பத்மாவதி
      - சிவகுமார் + ஜெயகௌரி
      - பத்மரஞ்சினி + உமாசங்கர்
      - பத்மினி + ஆனந்த குமார்
      - சாந்தினி + புவனேஸ்வரன்
      - கௌரிசங்கர்
    - பராசக்தி + பொன்னம்பலம்
    - சுப்பிரமணியம், + தர்மலக்ஷ்மி
  - குழந்தைவேலு + செல்லாச்சி, பொன்னம்மா
  - செல்லமுத்து + செல்லர்
    - பொன்னம்பலம் + பராசக்தி
    - சுப்பிரமணியம்
    - இரத்தினசபாபதி + சிவபாக்கியம்
      - கிருபாகரன்
  - பொன்னம்மா + சின்னத்துரை
  - கருப்பையா + சிவபாக்கியம்
  - குமாரசுவாமிப்பிள்ளை + சிவபாக்கியம்
    - குருசுவாமி + தில்லைநாயகி
      - சுரேந்திரன்
      - பவானி
      - செல்வேந்திரன்
      - ஜனனி

- ஆறுமுகம் செட்டியார் + மங்கையற்கரசி
  - தில்லைநாயகி
  - தையல்நாயகி
  - செந்தில்நாதன், மாலினி + ராஜி
    - துவாரகன், ஆரணி

